## சுருக்கம்

கலையும் பண்பாடும் – திருமலை திருப்பதி தேவஸ்தானம் – திருமலை திருப்பதி பிரம்மோத்சவம் 2018 – தமிழக கிராமியக் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது – செலவினங்களுக்காக ரூ.2,30,000/– நிதி ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

## சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (பண்–2) துறை

அரசாணை (ப) எண். 35

நாள்: 12–03–2019
திருவள்ளுவர் ஆண்டு 2050
விளம்பி வருடம், மாசி 28

**படிக்கப்பட்டது:-**

1. செயல் அலுவலர், திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி, அவர்களின் நேர்முகக் கடித எண் D.O Roc No. DP6/1073/HDPP/2017, நாள் 23.01.2018
2. கலை பண்பாட்டுத் துறை ஆணையரின் கடிதம் ந.க.எண். 2266/இ1/2018–1, நாள்: 06.09.2018 மற்றும் 30.01.2019

**ஆணை:–**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், திருமலை திருப்பதி தேவஸ்தானம் மூலம் 13.09.2018 முதல் 21.09.2018 வரை நடைபெறவுள்ள திருமலை திருப்பதி பிரம்மோத்சவம் 2018–ல் தமிழக அரசின் சார்பாக கிராமியக் கலை நிகழ்ச்சிகள் வழங்குமாறு திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் செயல் அலுவலர் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. திருமலை திருப்பதி தேவஸ்தானம் சார்பில் 13.09.2018 முதல் 21.09.2018 வரை நடைபெற்ற திருமலை திருப்பதி பிரம்மோத்சவம் 2018–ல் கலை பண்பாட்டுத் துறையின் காஞ்சிபுரம் மண்டலக் கலை பண்பாட்டு மையம் மூலம் 16.09.2018 மற்றும் 17.09.2018 ஆகிய இரண்டு நாட்கள் தமிழக கிராமியக் கலை நிகழ்ச்சிகள் வழங்கியதற்கு கீழே அட்டவணையில் உள்ளவாறு ஏற்பட்ட உள்ளபடியான செலவினத் தொகையான ரூ.2,30,000/–ஐ 2018–2019ஆம் நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.1 கோடியிலிருந்து நிதி ஒப்பளிப்பு செய்து அரசாணை

வழங்குமாறு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில் கலை பண்பாட்டு ஆணையர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்:-

| வ. எண். | கலை நிகழ்ச்சிகள் மற்றும் கலைக்குழுக்கள் விவரம் | கலைஞர்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | திரு. ச. மணிவண்ணன் (கைச்சிலம்பாட்டம்) | 16 | 40,000 |
| 2 | திரு. ஸ்டாலின் ராஜா, (கோலாட்டம், மாடாட்டம், கரகாட்டம், மயிலாட்டம்) | 17 | 40,000 |
| 3 | திரு. வெ. வெள்ளைப்பாண்டி (தேவராட்டம்) | 10 | 35,000 |
| 4 | திரு. வெ. சரவணன் (சேவையாட்டம்) | 11 | 35,000 |
| 5 | திரு. கு. சுந்தரமூர்த்தி (துப்பாட்டம்) | 12 | 25,000 |
| 6 | திரு. லோ. ரஜினிகாந்த் (ஒயிலாட்டம், கிராமியக் கலை நிகழ்ச்சிகள்) | 14 | 35,000 |
| 7 | போக்குவரத்து செலவினங்கள் | | 10,000 |
| 8 | புகைப்படச் செலவுகள் | | 6,000 |
| 9 | பேனர் மற்றும் சான்றிதழ்கள் | | 4,000 |
| | மொத்தம் | 80 | 2,30,000 |

3. கலை பண்பாட்டு ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, அதனை ஏற்று, திருமலை திருப்பதி தேவஸ்தானம் சார்பில் 13.09.2018 முதல் 21.09.2018 வரை நடைபெற்ற திருமலை திருப்பதி பிரம்மோத்சவம் 2018–ல் கலை பண்பாட்டுத் துறையின் காஞ்சிபுரம் மண்டலக் கலை பண்பாட்டு மையம் மூலம் 16.09.2018 மற்றும் 17.09.2018 ஆகிய இரண்டு நாட்கள் 80 கலைஞர்களைக் கொண்டு தமிழக கிராமியக் கலை நிகழ்ச்சிகள் வழங்கியதற்கு ஏற்பட்ட உள்ளபடியான செலவினங்களுக்காக ரூ.2,30,000/– (ரூபாய் இரண்டு இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்) தொகையினை நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும்:–

"2205 00 கலையும் பண்பாடும் – 102 கலை மற்றும் பண்பாட்டை வளர்த்தல் – மாநிலச் செலவினங்கள் – JA கலைப் பணிகளுக்கான ஒரு மொத்த நிதி ஒதுக்கம் – 09. உதவித் தொகை – 03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை"
(த.தொ.கு.2205 00 102 JA 0933)

5. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினைப் பெற்று வழங்க கலை பண்பாட்டு ஆணையருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

6. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சாரா எண்.8055/நிதி(கல்வி–II)துறை/2019, நாள் 08.03.2019–இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அபூர்வ வர்மா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
ஆணையர், கலை பண்பாட்டுத் துறை, சென்னை–8.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–9. (இருபடிகள்)
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (G&SSA), சென்னை–18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (E&RSA), சென்னை–18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (A&E), சென்னை–18.
உள்ளுரை தணிக்கை அலுவலர், முதன்மை கணக்காய்வுத் தலைவர்
(பொது மற்றும் சமூக பகுதி) அலுவலகம், சென்னை–9.
✓ உதவி இயக்குநர், மண்டலக் கலை பண்பாட்டு மையம், காஞ்சிபுரம்

<u>நகல்:-</u>
நிதி(கல்வி–II)த் துறை, சென்னை–9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச்செயலர்,
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை – 9.
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள்(பண்–1/பொது) துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு / நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

12/03/19
பிரிவு அலுவலர்

ஒ.ப
12/03/19